# அதிசசிந்தனை

ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்

மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்



## மாதாந்திர நோக்கம்: சூழலியல்

## பூமியின் அழுகை ஏழைகளின் அழுகை

“அனைத்துப் படைப்புகளும் அவற்றைப் படைத்தவரின் மேன்மையை நமக்கு எடுத்துரைக்கின்றன. இப்பெரிய மறைபொருளை உணரும் வகையில் நம் கண்களும் இதயங்களும் திறந்திருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.”
திருத்தந்தை பதினான்காம் லியோ

சுற்றுச்சூழல் பாதிப்பும் சமூக அநீதியும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. பூமி மற்றும் ஏழை மக்கள் ஆகிய இருதரப்பினரின் வேதனையையும் கடவுள் செவிமடுக்கிறார். அநீதியான கட்டமைப்புகள், பேராசை கொண்ட வாழ்க்கை முறைகள், ஏழை மக்கள் மற்றும் இயற்கை மீதான சுரண்டல் ஆகியவற்றை ஒழிக்க நாம் பாடுபட வேண்டும். இயற்கையைப் பாதுகாப்பதிலும் சுற்றுச்சூழல் புறக்கணிப்பால் அதிகம் பாதிக்கப்படும் சமூகங்களுக்கு உதவுவதிலும் நாம் முக்கியப் பங்காற்றவேண்டும்.

## தேர்ந்து தெளிதல்

### செவிமடுத்தலில் இருந்து செயல்

ஒவ்வொரு சிறிய குழுவும் தாங்கள் “நாம்” என்ற கண்ணோட்டத்தைப் பகிர்ந்துகொள்ளவும், தூய ஆவியார் எதற்கு அழைத்தார் என்று உணர்வதில் கவனம் செலுத்தவும் அழைத்தல். அதிசவாக, அன்றாட வாழ்க்கையில் ‘எளிய செயலைச் செய்ய’ வேரூன்ற உதவும் ஒரு வார்த்தையை அடையாளம் காணுதல்.
எடுத்துக்காட்டு:

- உங்கள் பகுதியில் ஒரு சூழலியல் சார்ந்த ஒரு செயலைத் திட்டமிடுங்கள்.
- ஒரு அதிச வாக ஏழை மக்களுக்கு நிலையான வளங்கள் மூலம் உதவிட பங்கு மனித வள மேம்பாட்டுப் பணிக்குழுவினருடன் (PIHD) இணைந்து நாம் எவ்வாறு செயல்படலாம்?

### பரிந்துரை இறைவேண்டல்

வழிநடத்துனர் பங்கேற்பாளர்களை சுருக்கமான இறைவேண்டலைச் செய்ய அழைத்தல்.

எடுத்துக்காட்டு:

- ஆண்டவரே, படைப்பின் நம்பிக்கைக்குரிய பொறுப்பாளர்களாகத் திகழ எங்களுக்குக் கற்றுத்தாரும்.

பதிலுரை: “ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.”

- ஆண்டவரே, பூமியின் அழுகை ஏழைகளின் அழுகுரலாக இருக்கிறது. அன்னை பூமியின் சுரண்டலால் துன்புறுவோருக்காக எங்கள் இதயங்களைத் திறந்திட எங்களுக்கு உதவியருளும்

பதிலுரை: “ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.”

### நிறைவு இறைவேண்டல்:

விண்ணகத் தந்தாய், எங்கள் பொது இல்லமான பூமியையும் ஏழைகளையும் எவ்வாறு பராமரிக்கவேண்டும் என்பதை எங்களுக்குக் கற்றுக்கொடுத்தீரே, உமக்கு நன்றி செலுத்துகிறோம். படைப்புகள் என்னும் பரிசுக்காக உம்மைப் போற்றுகிறோம். அன்னை பூமியின் அழகைப் பாதுகாத்து மீட்டெடுக்கும் எங்கள் முயற்சிகளில் எங்களுக்கு வழிகாட்டுவீராக. எங்களுக்கு முன்னால் இப்பூமியைப் பராமரித்தவர்களை நினைவுகூர எங்களுக்கு உதவிடுவீராக. நிலையான எதிர்காலத்திற்காக நாங்கள் ஒன்றிணைந்து செயல்படும்போது, அவர்களின் ஞானத்திலிருந்து நாங்கள் கற்றுக்கொள்ள அருள்தாரும். இவையாவும் எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

### நிறைவுப் பாடல்:

**படைப்பு எல்லாம் உமக்கே சொந்தம்**

படைப்பு எல்லாம் உமக்கே சொந்தம்
நானும் உந்தன் கைவண்ணம்
குயில்கள் பாடும் கிளிகள் பேசும்
என் வாழ்வு இசைக்கும் உன் இராகமே(2)

• இயற்கை உனது ஓவியம்
இணையில்லாத காவியம் -2
அகிலமென்னும் ஆலயம் நான் அதில் ஓர் ஆகமம் -2
உள்ளம் எந்தன் உள்ளம்
அது எந்நாளும் உன் இல்லமே – 2

• இதயம் என்னும் வீணையில் அன்பை
மீட்டும் வேளையில் – 2
வசந்த இராகம் கேட்கவே ஏழை என்னில்
வாருமே – 2
தந்தேன் என்னை தந்தேன் என்றும்
என் வாழ்வு உன்னோடு தான் (2)

ஆதாரம்: Bibleintamil.com 0638

**வெளியீடு:** மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | **Email:** api@archkl.org INTERNAL CIRCULATION ONLY

# எதிர்கொள்வது

## தொடக்கப் பாடல்:

### இறைவன் படைத்த நாளிதே

இறைவன் படைத்த நாளிதே நன்றி நன்றி
பாடுவோம்
இதயம் மகிழும் நாளிதே நன்றி நன்றி பாடுவோம்.
நன்றி இறைவா – 4 (2)

• வானம் பூமி யாவுமே நன்றி கூறட்டும்
வாழும் உயிர்கள் இயேசுவை வணங்கி மகிழட்டும்(2)
இதயம் இன்று இனிய கீதம் பாடட்டும் பாடட்டும் –2
இறைவன் இயேசு என்றும் நம்மைக் காப்பதால்
நன்றி இறைவா – 4 (2)

• கவலை யாவும் மறைந்தது கலக்கமில்லையே
காலமெல்லாம் கர்த்தர் இயேசு நம்மோடு உள்ளார் (2)
புதிய வானம் புதிய பூமி பூத்திட–2
புதிய பயணம் புவியில் இன்று தொடங்குவோம்
நன்றி இறைவா – 4 (2)

## தொடக்க இறைவேண்டல்:

விண்ணகத் தந்தையே, படைப்புகளை தொடர்ந்து பராமரிக்கும்படி எங்களுக்குக் கற்றுத்தாரும். ஏனெனில் தொடக்கத்திலிருந்தே படைப்புகளை மனிதகுலத்திடம் நீர் ஒப்படைத்திருந்தீர். எங்களின் புனிதமான கடமையையும் அதைப் புறக்கணித்ததால் ஏற்படும் விளைவுகளையும் அதற்கான விலையை பூமி இப்போது கொடுத்துகொண்டிருப்பதையும் நாங்கள் உணர்ந்துகொள்ளுமாறு தந்தையே, எங்களுக்கு நினைவூட்டியருளும். நாங்கள் ஒன்றுகூடி வரும் இவ்வேளையில், எங்கள் இதயங்களைத் திறந்தருளும்; ஏழைகளின் கூக்குரலுக்குக் காரணமான பூமியின் அழுகுரலுக்கு செவிசாய்க்க வேண்டிய எங்களின் பொறுப்பை எங்களுக்கு நினைவூட்டியருளும். இவையெல்லாம் எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

## மேய்ப்புப்பணிப் பாதை

2015 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ‘லாவ்டாதோ சி’ என்ற திருத்தந்தையின் சுற்றுமடலில், பூமியின் துன்பம் என்பது ஏழைகளின் துன்பமும் ஆகும் என்று கூறுவதன் மூலம், சுற்றுச்சூழலுக்கும் ஏழைகளுக்கும் இடையிலான பிணைப்பைத் திருத்தந்தை பிரான்சிஸ் வலியுறுத்தினார். சுற்றுச்சூழல் நெருக்கடி, மனித வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களைப் பாதித்தாலும், ஏழைகளே இதனால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். பூமியின் அழிவிற்கு மிகக் குறைந்த அளவே அவர்கள் காரணமானவர்களாக இருந்தபோதிலும், காலநிலை மாற்றம் அல்லது சுற்றுச்சூழல் சீர்கேட்டின் நீண்ட கால எதிர்மறை விளைவுகளை அவர்களே சுமக்க வேண்டியுள்ளது.

திருத்தந்தை, ஆயர்கள், கத்தோலிக்க பள்ளிகள் மற்றும் தனிநபர்கள் எனத் திருஅவையின் அனைத்து நிலைகளிலும் உள்ளவர்கள், ஏழைகள் மீது அக்கறை கொள்ளும் மனப்பான்மையையும், சுற்றுச்சூழலைப் பொறுப்புடன் பராமரிக்கும் உணர்வையும் வளர்க்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். சுற்றுச்சூழல் கொள்கைகள் குறித்த முடிவெடுப்பவர்களிடம் ஏழைகள் மற்றும் மிகவும் பாதிக்கப்பட்டவர்களின் குரலைக் கொண்டு சேர்க்க, அரசுகள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பிற சமயங்களின் பிரதிநிதிகளுடனும் திருஅவை இணைந்து செயல்படுகிறது.

வறுமையில் வாடும் மக்கள் தங்கள் உடல்நலம் மற்றும் வாழ்க்கைத் தரத்துடன் தொடர்புடைய இரண்டு முக்கிய பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்: அவை உணவு மற்றும் பாதுகாப்பான குடிநீர் பற்றாக்குறை ஆகும். இயற்கை வளங்களை, குறிப்பாக விவசாயம், மற்றும் தொழில்துறைத் துறைகளில் நிலையற்ற முறையில் பயன்படுத்துவதும் நிர்வகிப்பதும் இப்பிரச்சினைகளுக்கு முக்கிய காரணங்களாக உள்ளன. சுற்றுசூழல் நெருக்கடிகளுக்குப் பதிலளிக்கும் விதமாக, கத்தோலிக்கத் திருஅவை சுற்றுச்சூழல் பாதுகாப்பைத் தனது போதனைகளின் ஒரு பகுதியாக இணைத்துள்ளதுடன், மனித குலத்தின் பொதுநலனுக்குச் சுற்றுச்சூழல் இன்றியமையாதது என்பதையும் அங்கீகரித்துள்ளது.

கடந்த பத்தாண்டுகளில், சுற்றுச்சூழல் சீர்கேட்டை எதிர்த்துப் போராடுவதிலும், உலகளாவிய அழைப்பாக அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகளை ஊக்குவிப்பதிலும் திருஅவை மிகவும் தீவிரமாகப் பங்கேற்று வருகிறது.

*Source: National Conference on Catechesis and Religious Education Conference Proceedings, Philippines*

# இறைவார்த்தை

## தோபித்து 4:7

ஏழை எவரிடமிருந்தும் உன் முகத்தைத் திருப்பிகொள்ளாதே. அதனால் கடவுளும் தம் முகத்தை உன்னிடமிருந்து திருப்பிக்கொள்ளமாட்டார்.



# உரையாடல்

## ஆவியில் கலந்துரையாடல்

4–6 பேர் கொண்ட குழுவில் கீழ்க்கண்ட மூன்று சுற்றுகளில் பகிர்ந்துகொள்ளுங்கள். ஒவ்வொரு பகிர்வுக்குப் பிறகும் ஒரு நிமிடம் அமைதியில் இருப்போம்.

**சுற்று 1** “நான்” என்னும் கண்ணோட்டத்தில் (அமைதியில் தியானிக்க தயாராயிருங்கள். அனைவரும் பகிர்ந்துகொள்ளலாம், ஆனால் ஒவ்வொருவரும் 2 நிமிடத்திற்கு மேல் பகிரக்கூடாது. மற்றவருடைய பகிர்வையொட்டி எந்தக் கருத்தும் தெரிவிக்க வேண்டாம்)

• பூமி மற்றும் ஏழைகளின் அழுகை குறித்து எனது மனப்பான்மையும் என்னுடைய மறுமொழியும் என்ன?

(ஒவ்வொரு நபரின் பகிர்வுக்கும் நன்றி சொல்லியபின், ஒரு நிமிடம் அமைதி காத்தபின் அடுத்த நபர் பகிர்வைத் தொடங்கலாம்)

**சுற்று 2** “நீங்களும் நானும்” என்னும் கண்ணோட்டத்தில்:
(இப்போது குழுவில் மற்றவர் பகிர்ந்த கருத்துகளுக்குப் பதில் அளிக்க அழைப்பு – ஒவ்வொருவரும் ஒருமுறை மட்டுமே தங்களுடைய கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளலாம்.)

அனைவரின் கருத்துகளையும் செவிமடுத்தபின்:

• மற்றவர்கள் பகிர்ந்துகொண்டவற்றில் என் கவனத்தை ஈர்த்தது எது?

(ஒன்று அல்லது இரண்டு குறிப்புகளைத் தெரிவிக்கவும்)

**சுற்று 3** – ‘நாம்’ என்னும் கண்ணோட்டத்தில்:
(இப்போது வழிநடத்துனர் அல்லது பொறுப்பாளர் அனைவரும் பகிர்ந்துகொண்டவற்றில் இருந்து பொதுவான கருத்தைத் தேர்ந்தெடுக்குமாறு அனைவரையும் அழைப்பார்)

• பூமியையும் ஏழைகளையும் பராமரிப்பதற்காக மற்றப் பணிக்குழுக்களுடன் இணைந்து செயல்படுவதைக் குறித்து தூய ஆவியார் நம்முடைய அதிசக்களுக்கு என்ன கூறுகிறார்?

(ஒவ்வொரு நபரின் பகிர்வுக்கும் நன்றி சொல்லியபின், ஒரு நிமிடம் அமைதி காத்தபின் அடுத்த நபர் பகிர்வைத் தொடங்கலாம்)